SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

குரோதி வருடம் மாசி 27 | மாநிலம் பயனுற! | ஹிஜிரி 1446 ரமலான் 10

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

● புதுச்சேரி ● செவ்வாய்க்கிழமை, மார்ச் 11, 2025 ● வெளியூர்: 12-3-2025, புதன்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 235 ● 8 பக்கம் ● ரூ.6

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

## மக்களவை, மாநிலங்களவையில் திமுக எம்.பி.க்கள் அமளி



புதுடெல்லி, மார்ச் 11-

மத்திய அரசின் புதிய தேசிய கல்விக்கொள்கையை தமிழக அரசு எதிர்த்து வருகிறது. குறிப்பாக அதில் இடம்பெற்று உள்ள மும்மொழிக் கொள்கை மூலம் தமிழகத்தில் மத்திய அரசு இந்தியை திணிக்க முயற்சிப்பதாக கூறி அந்த கொள்கையை ஏற்க மறுத்து வருகிறது. இதனால் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே கடுமையான மோதல் ஏற்பட்டு உள்ளது.

இந்த பரபரப்பான சூழலில் நாடாளுமன்ற பட்ஜெட் தொடரின் 2வது பகுதி நேற்று தொடங்கியது. இதில் மும்மொழிக் கொள்கை பிரச்சினை புயலை கிளப்பியது. திமுக எம்.பி.க்கள் மத்திய கல்வி மந்திரி இடையே விவாதம் நடந்தது. அப்போது திமுக எம்.பி.க்கள் நேர்மையாக இல்லை. ஜனநாயகத்துக்கு எதிராக இருக்கிறார்கள். நாகரிகமற்றவர்கள் என்று மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் கூறினார்.

மந்திரி தர்மேந்திர பிரதானின் கருத்துக்கு தி.மு.க. மற்றும் தமிழக காங்கிரஸ் எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். சிலர் அவையின் மையப்பகுதிக்கு சென்று கோஷமிட்டனர். மேலும் மத்திய மந்திரிக்கு எதிராக திமுக எம்.பி. கனிமொழி உரிமை மீறல் நோட்டீஸ் அளித்தார். இந்நிலையில், மத்திய மந்திரி தர்மேந்திர பிரதானின் பேச்சிக்கு கண்டனம் தெரிவித்து திமுக மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கருப்பு உடை அணிந்து, பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதனையடுத்து நாடாளுமன்ற இரு அவைகளும் தொடங்கியது. அவை தொடங்கியதில் இருந்தே மக்களவையில், திமுக கூட்டணி கட்சி எம்.பி.க்கள் அவையில் அமளியில் ஈடுபட்டனர். மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எதிராக திமுக கூட்டணி கட்சி எம்.பி.க்கள் அவையில் முழக்கம் எழுப்பினர். மேலும் தர்மேந்திர பிரதான் மன்னிப்பு கோர வேண்டும் என வலியுறுத்தினர். அதைபோல தொகுதி சீரமைப்பு, கல்வி நிதி உள்ளிட்ட விவகாரங்கள் குறித்த நோட்டீஸ் மீது விவாதம் நடத்த அனுமதி மறுத்ததால் மாநிலங்களவையிலும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர்.

### பொதுமக்கள், தொண்டர்களை சந்தித்தார்

# செங்கல்பட்டில் முதல்வர் ரோடு ஷோ

### மாற்றுத்திறனாளிகளுக்கு பணி ஆணை வழங்கினார்



சென்னை, மார்ச் 11-

செங்கல்பட்டு மாவட்டம் குன்னம்பட்டில் நடந்த நிகழ்ச்சியில், ரூ.515 கோடி முதலீட்டில் ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 'கோத்ரெஜ் கன்ஸ்யூமர் புராடக்ஸ்' நிறுவனத்தின் உலகத்தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

கோத்ரெஜ் கன்ஸ்யூமர் புராடக்ஸ் உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்து பெண்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிலையில் செங்கல்பட்டில் 2வது நாளாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு மேற்கொள்கிறார். செங்கல்பட்டு செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள், தி.மு.க. தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். திருக்கழுக்குன்றம் பகுதியில் வாகனத்தில் இருந்து இறங்கி பொதுமக்கள், தொண்டர்களை முதலமைச்சர் சந்தித்தார்.

## பெஞ்சால் புயலால் வீடுகளை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்காத புதுச்சேரி அரசை கண்டித்து

### பேரவையிலிருந்து திமுக, காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு



புதுச்சேரி, மார்ச் 11-

புதுச்சேரி பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது நாளான இன்று துணைநிலை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது உறுப்பினர்கள் தங்கள் கருத்தை பதிவு செய்து வந்தனர். அப்போது பல உறுப்பினர்களும் பெஞ்சால் புயலால் வீடுகளை இழந்தவர்களுக்கு முழுமையான நிவாரணம் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தனர். அப்போது குறுக்கிட்டு பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா, பெஞ்சால் புயலால் வீடுகளை இழந்து தங்கள் வாழ்வாதாரத்தை தொலைத்த மக்களுக்கு இதுநாள் வரை புதுச்சேரி அரசு முழுமையாக கணக்கெடுத்து முழு நிவாரணம் வழங்காமல் அவர்களை வஞ்சித்து உள்ளது. இதுகுறித்து இந்த சபையில் முறையாக அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றார். இதற்கு அரசு தரப்பில் இருந்து பதில் ஏதும் வராத காரணத்தால் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமையில் திமுக உறுப்பினர்கள் ஏ.எம்.எச். நாஜிம், வி.அனிபால் கென்னடி, எல். சம்பத், நாக. தியாகராஜன், காங்கிரஸ் சட்டமன்றஉறுப்பினர்கள் மு.வைத்தியநாதன், ரமேஷ் பரம்பத் ஆகியோர் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா, புதுச்சேரி மாநிலத்தில் மழை வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றங்களால் வீடுகளை இழந்து உள்ளவர்கள் குறித்து கடந்த மூன்று ஆண்டுகளாக கணக்கெடுப்பு நடத்தியும் இன்னும் நிவாரணம் வழங்கவில்லை. அதேபோல் பெஞ்சால் புயல் புதுச்சேரியில் கரையை கடந்தபோது பெருத்த சேதம் ஏற்பட்டது. இதில் பொதுவாக அனைவருக்கும் ரூ. 5 ஆயிரம் நிவாரணம் வழங்கப்பட்டதே தவிர, வீடுகளை இழந்தவர்கள், கால்நடைகளை இழந்தவர்கள், ஆற்றுப்படுகையில் மழை, வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து முழுமையாக கணக்கெடுப்பு நடத்தி முழுமையாக நிவாரணம் வழங்க இந்த அரசு தவறிவிட்டது. இது குறித்து பேரவையில் கேட்டால் பதில் இல்லை. இனியும் தருவதாக தெரியவில்லை. இதனை கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்துள்ளோம்.

தொடர்ந்து, மாநிலத்திலும், ஒன்றியத்திலும் ஒரே ஆட்சி இருந்தும் புதுச்சேரி அரசு கோரிய பேரிடர் நிதி ரூ.700 கோடிக்கு வெறும் ரூ.61 கோடி மட்டும் வழங்கி புதுச்சேரியை ஒன்றிய அரசு வஞ்சித்து உள்ளது என்றும், புதுச்சேரி அரசு வழங்கிய நிவாரண நிதி மற்ற துறைகளில் நலத்திட்டங்களுக்கு வைக்கப்பட்ட நிதி மடை மாற்றப்பட்டுள்ளது என்றும் இதனால் நலத்திட்டங்கள் தேக்கம் அடைந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா குற்றம்சாட்டினார்.

திருச்சி
ப்ரண்ட்லைன் மருத்துவமனை
முதலமைச்சரின் காப்பீட்டுத்திட்டத்தில்
சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை
24 மணி நேர இரத்த சுத்திகரிப்பு
உலக சிறுநீரக தினம்-மார்ச் 13
"சிறுநீரகம் நலமா ! சிறுநீரகத்தை காப்பாற்றுவோம்"
ARE YOUR KIDNEYS OK?
Detect early, protect kidney health
Dr.S.கணேஷ் அரவிந்த் MD., DM., DNB
சிறுநீரக சிறப்பு மருத்துவர் மற்றும் மாற்று சிறுநீரக மருத்துவ நிபுணர்
Dr.N.கார்த்திக்கேயன் M.S., MRCS (Edin) D.N.B., M.Ch., Urology
சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர்
சிறுநீரக பரிசோதனைகள்
◆ CBC
◆ Urea / Creatinine
◆ Urine routine
◆ USG Abdomen
₹ 500
10.03.2025 முதல் 14.03.2025 வரை
இலவச மருத்துவ ஆலோசனைகள்
நேரம் : காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை
தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிகிச்சை.அனைத்து தனியார் காப்பீடு வசதிகள்
அண்ணாசிலை, சத்திரம் பேருந்து நிலையம், திருச்சி–2.
முன்பதிவிற்கு : – Ph : 0431-4047760 Cell : 8489912738

மாலை எக்ஸ்பிரஸ்

# பொதுமக்களிடம் பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு காண வேண்டும்

## அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவு



விழுப்புரம், மார்ச் 11-

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடம் பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று மனுதாரர்கள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு தொடர்புடைய அலுவலர்கள் மனுக்கள் மீது உடனடியாக கவனம் எடுத்து குறித்த காலத்திற்குள் தீர்வு வழங்கிட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சுமார் 578 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. அதில் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைபட்டாக் கோருதல், ஆதரவற்றோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், தொழில் தொடங்க கடனுதவி கோருதல், கலைஞரின் கனவு இல்லம் திட்டம், பிரதம மந்திரி வீடுகட்டும் திட்டம், உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை நேரடியாக பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள், முதல்வரின் முகவரி மனுக்கள் மற்றும் அமைச்சர் பெருமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடி தீர்வு காண அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) இ.பத்மஜா தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) முகுந்தன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தமிழரசன், மாவட்ட வழங்கல் அலுவலர் சந்திரசேகர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வளர்மதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு மான்ய தீவனத்தை மாதம் தோறும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்

## காரைக்கால் டெல்டா விவசாயிகள் சங்க இணை செயலாளர் கோரிக்கை



காரைக்கால், மார்ச் 11-

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய மான்ய தீவனத்தையும் மாதம் தோறும் கூட்டுறவு துறை மூலமாக கிடைக்கவும் ஆவன செய்ய வேண்டும் என, புதுச்சேரி முதலமைச்சருக்கு, காரைக்கால் டெல்டா விவசாயிகள் சங்க இணை செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் சங்க இணை செயலாளர் சோமு இது குறித்து புதுச்சேரி முதலமைச்சருக்கு அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது: வருகின்ற புதுச்சேரி மாநில நிதி நிலை அறிக்கையில், முதலமைச்சர் வெண்மை புரட்சிக்கு முக்கியத்துவும் கொடுக்கும் வகையில், கால்நடைகளுக்கு செய்யப்படும் காப்பீட்டை அனைத்து கால்நடை வளர்ப்போருக்கும் காப்பீடு பிரிமிய தொகையை அரசே முழுவதும் செலுத்திட வேண்டும் (மஞ்சள் குடுப்ப அட்டை உள்ள கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கும்) அதன் மூலமாக கால்நடை திடீர் நோயால் இறக்கும் பொழுது அனைத்து சிறு விவசாயிகளுக்கும் ஏற்படும் பெரும் நஷ்டததால் அவதி படுவதை தடுத்திட அரசு முன் வர வேண்டும். கால்நடை துறை மூலமாக கொடுக்கப்பட்ட தீவனத்தை இனி வரும் காலங்களில் எந்தவித தடையும் இன்றி மாதம் தோறும் கால்நடை வளர்ப்போருக்கு கிடைக்கும் வகையில் நிதி ஒதுக்கி மான்ய தீவனம் தங்கு தடை இன்றி கிடைக்க ஆவன வேண்டும், மேலும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய மான்ய தீவனததயும் மாதம் தோறும் கூட்டுறவு துறை மூலமாக கிடைக்கவும் ஆவன செய்ய வேண்டும். மாநிலத்தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவ மனைகளுக்கும் நிரந்தர மருத்துவர்கள் மற்றும் தேவையானபயிற்சி பெற்ற உழியர்களை நியமானம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் சிகிச்சக்கு தேவையான மருத்துவ உபகாரணங்கள் சினை ஊசி உயிர் காக்கும் மருந்துகள் தட்டுப்பாடு இன்றி கிடைக்கும் வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். காரைக்கால் மாவட்டத்திற்கென ஒரு கால்நடை அவசர ஊர்தியை இயக்கிட நிதி ஒதுக்கி காரைக்கால் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் நலன் காக்க வேண்டும். கோடை காலத்தில் கால்நடைகளுக்கு வரும் கோமாரி அம்மை நோய்களுக்கு உரிய தடுப்பு ஊசிகளை உரிய காலத்தில் போட வேண்டிய அவசியம் கருதி, அதற்கு வேண்டிய நிதி முழுமையாக ஒதுக்கிட வேண்டும். கால்நடை வளர்க்கும் சிறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் மாடு மற்றும் ஆடு வளர்க்க எதுவாக அதற்கு உரிய கொட்டகை அமைக்க ஆகும் முழ செலவயும் அரசே மான்யமாக கொடுத்து உதவி செய்ய வேண்டும். கால்நடைகளுக்கு தேவையான பசும்தீவனம் வளர்ப்பை ஊக்குவிக்கும் விதமாக பசுத்தீவனம் வளர்க்கும் விவசாயிகளுக்கு மான்ய தொகை அறிவிக்க வேண்டும். தொடக்ககூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்ககளுக்கு பால் கொள்முதல் செய்ய தேவையான தர ஆய்வு பொருள்கள் அரசு மூலமாக கொடுத்து பாலின் தரத்தை மேம்படித்திட உதவிட வேண்டும். காரைக்கால் மாவட்டத்தில் புதுச்சேரி மாநில கால்நடை கல்லூரியின் அலுவலகத்துடன் கூடிய மருத்துவ மனையை அமைத்திட வேண்டும். கால்நடை துறையின் மூலமாக கால்நடைகளுக்கு தேவையான தாது உப்பை இலவசமாக கொடுக்க ஆவன செய்ய வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# திருவெண்ணெய்நல்லூர் அருகே காயமடைந்த மான் மீட்பு

திருவெண்ணெய்நல்லூர், மார்ச் 11-

திருவெண்ணெய்நல்லூர் அருகே மணக்குப்பம் தனியார் திருமண மண்டபம் முன்பு விவசாய நிலப் பகுதியில் மான் ஒன்று காயமடைந்து நடக்க முடியாமல் இருந்துள்ளது. இதனை கண்ட அப்பகுதி பொதுமக்கள் வனத்துறைக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் வன காவலர் கோபாலகிருஷ்ணன் தலைமையிலான காவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று காயமடைந்த மானை மீட்டு சிகிச்சை அளிப்பதற்காக வனத்துறை அலுவலகத்திற்கு எடுத்து சென்றனர். மேலும், அந்த மான் அருகில் உள்ள டி.எடையார் வனப் பகுதியிலிருந்து வந்திருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.



# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்




மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் உள்ளார்.

# மினி பேருந்து இயக்குவதற்கு விண்ணபத்தாரரை தேர்வு செய்ய குலுக்கல்



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி முன்னிலையில் வேலூர் மாவட்டத்தில் 36 வழித்தடங்களில் மினி பேருந்து இயக்குவதற்கு பெறப்பட்ட விண்ணப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட வழித்தடங்களுக்கான விண்ணப்பத்தாரரை தேர்வு செய்ய குலுக்கல் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தரராஜன் உடனிருந்தார்.

# தூத்துக்குடியில் மிக கனமழை பெய்யும் எச்சரிக்கை: முன்னேற்பாடு பணிகள் தொடர்பான கூட்டம்



இந்திய வானிலை ஆய்வுத்துறையின் சென்னை மண்டல மையத்தால் 11.03.2025 மற்றும் 12.03.2025 ஆகிய நாட்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் மிக கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுத்துள்ளதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்து நிலை அலுவலர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் தலைமையில் முன்னேற்பாடு பணிகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

# அரசின் சாதனைகள் விளக்க புகைப்படக் கண்காட்சி



சேலம் மாவட்டம், வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம், பெரிய கிருஷ்ணாபுரம் ஊராட்சி மன்ற திடலில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# சேலம் ஸ்ரீ இராஜகாளியம்மன் கோயிலில் விளக்கு பூஜை



**சேலம் , மார்ச் 11-**

சேலம் களரம்பட்டி மெயின் ரோடு தேவி தியேட்டர் பின்புறம் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ இராஜகாளியம்மன் ஸ்ரீ இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோவில் 37 ஆம் ஆண்டு திருவிழாவை முன்னிட்டு, விளக்கு பூஜை நடைபெற்றது. இப்பூஜைக்கு கோவில் தலைவர் பாலன் தலைமை தாங்கி நடத்தினார். கோவில் பூசாரிகள் ராஜா என்கிற சுரேஷ், சம்பத், சரத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த விளக்கு பூஜையில் திரளான பெண்கள் கலந்து கொண்டு விளக்கு வைத்து வழிபட்டனர். இதில் ஸ்ரீ ராஜகாளியம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்து சிறப்பு பூஜை நடைபெற்றது. பூஜையில் கோவில் நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# செஞ்சி அடுத்த கவரை ஊராட்சியில் அகில உலக பெண்கள் தின விழா



**செஞ்சி, மார்ச் 11-**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே கவரை பகுதியில் அமைந்துள்ள செங்கதிர் பழங்குடி இருளர் பெண்கள் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், அகில உலக பெண்கள் தின விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் பலவை பணியாளர்கள் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலுடன் தொடங்கிய இந்நிகழ்வு இந்திய அரசியல் சாசன முகப்புரை குத்துவிளக்கு ஏற்றுதல், பலவகை அமைப்பு செங்கதிர் பழங்குடி இருளர் பெண்களின் நடனங்கள் நடைபெற்றது. பலவை அமைப்பால் முன்னேற்றம் அடைந்த பழங்குடி இருளர் பெண்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். பின்னர் பலவகை விழிப்புணர்வு பாடல்கள் நடைபெற்றது. இதில் 12 பலவை இருளர் பழங்குடி பெண்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் பசு வளர்ப்புக்கு 6,00,000 ரூபாய் காசோலை வழங்கப்பட்டது. பின்னர் செய்தியாளர்களுக்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பழங்குடியின பெண்கள் பேட்டி அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஏற்பாடுகளை அருள்பணி இயக்குனர் ஆரோக்கியசாமி , அருள்பணி ஆனந்த் திட்ட இயக்குனர் துணை திட்ட இயக்குனர் பசில், அனந்தபுரம் காவல் துணை ஆய்வாளர் மருதப்பன் மற்றும் பலவை அமைப்பு பணியாளர்கள், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செவலப்பரை ஆசிரியயை அஞ்சுகம் கலந்து கொண்டனர்

# இயக்குனர் ஷங்கரின் ரூ.10.11 கோடி சொத்து முடக்கத்துக்கு இடைக்கால தடை: சென்னை ஐகோர்ட் உத்தரவு



**சென்னை, மார்ச் 11-**

தமிழ் சினிமாவில் பிரமாண்ட இயக்குனராக வலம் வரும் ஷங்கரின் கடைசி 2 படங்களான கமல்ஹாசனின் 'இந்தியன் 2', ராம்சரணின் 'கேம் சேஞ்சர்' ஆகியவை வசூல் ரீதியில் தோல்வியை தழுவின.

இந்த நிலையில், 'எந்திரன்' படத்தின் கதை காப்புரிமை தொடர்பாக ஷங்கர் மீது அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்தது. இது தொடர்பான வழக்கு நடந்து வரும் நிலையில், முதற்கட்டமாக ரூ.10.11 கோடி மதிப்பிலான அவரின் 3 சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கி நடவடிக்கை எடுத்தது.

இதுகுறித்து அப்போது கருத்து தெரிவித்த இயக்குனர் ஷங்கர், "அமலாக்கத்துறையின் நடவடிக்கை சட்ட செயல்முறையின் அப்பட்டமான துஷ்பிரயோகத்தை குறிக்கிறது. அதிகாரிகள் தங்களது நடவடிக்கையை மறுபரிசீலனை செய்வார்கள் என நம்புகிறேன். மறுபரிசீலனை செய்யவில்லை என்றால் அமலாக்கத்துறை உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்வேன்" என்று கூறியிருந்தார். இந்த நிலையில், இயக்குனர் ஷங்கர் தொடுத்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம். எஸ்.ரமேஷ், என்.செந்தில்குமார் ஆகியோர், இயக்குனர் ஷங்கரின் ரூ.10.11 கோடி சொத்துக்களை முடக்கிய அமலாக்கத்துறையின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்தனர். மேலும், விசாரணையை ஏப்ரல் 21ந் தேதிக்கு தள்ளிவைத்தனர். அதற்குள் அமலாக்கத்துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

# பாம்பு கடித்து இறந்த 14 மாத குழந்தையின் தாயாருக்கு 1லட்சத்துக்கான காசோலை வழங்கல்



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி அணைக்கட்டு வட்டம், அல்லேரி கிராமத்தை சார்ந்த பாம்பு கடித்து இறந்த 14 மாத குழந்தை தனுஷ்காவின் தாயார் பிரியா என்பவருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, துணை ஆட்சியர் (பயிற்சி) ரவிக்குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில்குமரன், உதவி ஆணையர் (கலால்) முருகன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி விஷ்ணுபிரியா, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் மதுசெழியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் சீதா உட்பட பலர் உடனிருந்தனர்.

# 11ம் வகுப்பு பொதுத்தேர்வை ஆட்சியர் ஆய்வு




திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் திருவண்ணாமலை, நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருந்திய தையல் இயந்திரங்களை ஆட்சியர் வழங்கினார்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் க. இளம்பகவத் மோட்டார் பொருந்திய தையல் இயந்திரங்களை வழங்கினார்.

# மோர்தா இடது பிரதான கால்வாயை தூர்வாரி புனரமைக்கும் பணியை அடிக்கல் நாட்டி அமைச்சர் தொடங்கி வைத்தார்




நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ரூ.2.50கோடி மதிப்பீட்டில் குடியாத்தம் மற்றும் கீவகுப்பம் வட்டத்தில் உள்ள மோர்தா இடது பிரதான கால்வாய் தூர்வாரி புனரமைக்கும் பணிக்கு கி.வ.குப்பத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புவெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார். வி.அமுலு விஜயன், ஒன்றியக்குழுத்தலைவர்கள் ரவிசந்திரன் (ஐ.வ.குப்பம்) என்.சத்யானந்தம் (குடியாத்தம்) குடியாத்தம் நகர்மன்ற தலைவர் சௌந்தரராஜன், மேல்பாலாறு வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் ஆர்ரமேஷ், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, மேல்பாலாறு வடிநில வட்ட செயற்பொறியாளர் பிரபாகர், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்ட முதல்வர் மருந்தகங்களில்

# 13 நாளில் ரூ.1.15 லட்சத்தில் மருந்து, மாத்திரை தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது

**ஆட்சியர் தகவல்**



சேலம், மார்ச் 11-

சேலம் மாவட்டத்தில் முதல்வர் மருந்தகங்களில் கடந்த 13 நாட்களில் மட்டும் ரூ.1.15 லட்சம் மதிப்பிலான மருந்து, மாத்திரைகள் தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் முதல்வர் மருந்தக செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி. நிறைந்தது மனம் நிகழ்வில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்குத் தேவையான மருந்து, மாத்திரைகளை குறைந்த விலையில் வழங்கும் நோக்கோடு முதல்வர் மருந்தகத்தினை தமிழ்நாட்டில் முதற்கட்டமாக கடந்த பிப்ரவரி 24 ம் தேதி 1000 மருந்தகங்களை திறந்து வைத்துள்ளார்கள். இம்மருந்தகங்கள் அனைத்திலும் 20 முதல் 90 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் வழங்கப்படுவதால் பொதுமக்களுக்கு இம்மருந்தகம் மிகுந்த பயனுள்ள வகையில் அமைந்துள்ளது.

மருந்து, மாத்திரைகளின் தேவைகளின் அடிப்படையில் படிப்படியாக பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து மருந்து, மாத்திரைகளையும் குறைந்த விலையில் விற்பனைக்கு தொடர்ந்து வழங்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் முதல்வர் மருந்தகங்களில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக சேலம் மாவட்டத்தில் கடந்த 13 நாட்களில் மட்டும் 32 முதல்வர் மருந்தகங்களில் ரூ.1.15 லட்சம் மதிப்பிலான மருந்து மாத்திரைகள் தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் பொதுமக்களுக்கு ரூ.37.4 ஆயிரம் மானியத்தில் மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தை பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 16 முதல்வர் மருந்தகங்களும், தொழில்முனைவோர் மூலம் 16 முதல்வர் மருந்தகங்களும் என மொத்தம் 32 முதல்வர் மருந்தகங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. முதல்வர் மருந்தகத்தின் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் ஜெனரிக் மருந்துகள் 20% முதல் 90% வரை தள்ளுபடி விலையிலும், பிற மருந்துகளுக்கு 25% வரை தள்ளுபடி விலையிலும் வழங்கப்படுகிறது. உதாரணமாக, சர்க்கரை நோயிற்கான மெட்பார்மின் மாத்திரை தனியாரில் ரூ.70 என்றால் முதல்வர் மருந்தகத்தில் ரூ.11க்கு கிடைக்கிறது.

குறிப்பாக, தொழில்முனைவோர்கள் இம்மருந்தகத்தினை அமைத்திட ரூ.3 லட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. அதேபோன்று கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் துவங்கப்படும் மருந்தகங்களுக்கு ரூ.2 லட்சம் மானியமும் வழங்கப்படுகிறது. ஜெனரிக் மருந்துகளைப்பொறுத்தவரை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலமாகவும், இதர மருந்துகள் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மூலமாகவும் கொள்முதல் செய்யப்பட்டு மாவட்ட மருந்து கிடங்கிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் முதல்வர் மருந்தக சேமிப்புக் கிடங்கு செயல்பட்டு வருகிறது. மக்கள் நலனுக்கான தமிழ்நாடு அரசின் மற்றுமொரு உன்னதமான திட்டமாக முதல்வர் மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகம் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் மருந்து செலவைக் குறைக்கும் நோக்குடன் தரமான மருந்துகள் குறைவான விலையில் சேலம் மாவட்டம் முழுவதும் கிடைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதல்வர் மருந்தகத்தின் பயன்பாடுகள் குறித்து பொதுமக்கள் அதிகளவில் அறிந்து பயன்பெறும் வகையில் தேவையான விளம்பரப்பணிகள் மேற்கொள்ளவும், சேலம் மாவட்டத்தில் எந்தந்த இடங்களில் தற்பொழுது முதல்வர் மருந்தகங்கள் செயல்படுகின்றன என்பது குறித்து பொதுமக்கள் அதிகளவில் தெரிந்து கொண்டு பயன்பெறவும் தேவையான நடவடிக்கைகள் தொடர்புடைய துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறப்புமிக்க முதல்வர் மருந்தகத்தினை தேவைப்படும் பொதுமக்கள் உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.

சேலம் மாவட்டத்தில் முதல்வர் மருந்தகத்தில் மருந்துகள் வாங்கிவரும் அம்மாப்பேடை பகுதியைச்சேர்ந்த தினேஷ்பாபு தெரிவித்ததாவது: நான் சேலம் மாவட்டம், அம்மாப்பேட்டை பகுதியில் வசித்து வருகிறேன். எனது குடும்பத்திற்கு தேவையான மருந்து, மாத்திரைகளை தனியார் மருந்துக்கடைகளில் 10 முதல் 15 சதவீத தள்ளுபடியில் வாங்கி வருகிறேன். ஆனால் தற்பொழுது புதிதாக திறக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தில் ஜெனரிக் வகை மருந்துகள் 20 முதல் 90 சதவீதம் வரை தள்ளுபடியில் எங்களுக்கு தருகிறார்கள். இதனால் எங்களைப்போன்றவர்களுக்கு பெருமளவில் மருந்து, மாத்திரைகளுக்கான பணம் மிச்சமாகிறது.

குறிப்பாக அனைத்து தரப்பு மக்களுக்கும் என்ன தேவை என்பதை பார்த்து பார்த்து செய்கின்ற முதலமைச்சராக தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்கிறார்கள். பல்வேறு நிதிப்பிரச்சினைகளுக்கு அப்பாலும் தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்தையும் உள்ளபடியே செயல்படுத்தி வருகின்ற இத்தகைய முதலமைச்சருக்கு எப்போதும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.

தொழில் முனைவோர் என்ற அடிப்படையில் ரூ.3 இலட்சம் மானியம் பெற்று அம்மாப்பேட்டை பகுதியில் முதல்வர் மருந்தகத்தினை புதிதாக தொடங்கியுள்ள சக்திவேல் தெரிவித்ததாவது: நான் பி பார்ம் படித்து விட்டு தனியார் மருந்துக்கடைகளில் கடந்த 3 ஆண்டுகளாக வேலைபார்த்து வந்தேன். நாமும் ஒரு நிறுவனத்தை தொடங்க வேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்தது.

ஆனால் அதற்கேற்ற பொருளாதார வசதி இல்லாததால் தொடர்ந்து மாத சம்பளத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தேன். இந்நிலையில் பொதுமக்கள் அனைவராலும் நீண்டகாலம்எதிர்பார்க்கப்பட்ட குறைந்த விலையிலான ஜெனரிக் மருந்துகளை முதல்வர் மருந்தகங்கள் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதையும் இதில் விருப்பமுள்ள தொழில் முனைவோர்களுக்கு ரூ.3 லட்சம் தமிழ்நாடு அரசே வழங்குகிறது என்பது குறித்தும் செய்தி கேள்விப்பட்டதுடன் மகிழ்ச்சியுடன் இதற்கு விண்ணப்பித்திருந்தேன்.

அந்தவகையில் மருந்துக்கடை அமைப்பதற்கு உடனடியாக ரூ.1.5 லட்சமும், மருந்து, மாத்திரைகளுக்கு ரூ.1.5 லட்சத்திற்கும் என ரூ.3 லட்சம் முழுமையும் மானியமாக வழங்கினார்கள். இதைக்கொண்டு கடந்த பிப்ரவரி 24 ம் தேதி முதல் மருந்தகத்தினை தொடங்கி நடத்தி வருகிறேன். பொதுமக்களும் குறைந்த விலையில் முதல்வர் மருந்தகத்தில் மருந்துகள் கிடைக்கின்றன என்பதை கேள்விப்பட்டு என்னுடைய மருந்துக்கடைக்கு வந்து தேவையான மருந்து, மாத்திரைகளை வாங்கி செல்கின்றனர்.

எவ்வித பாகுபாடும் இல்லாமல் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறுகின்ற வகையில் குறைந்த விலையில் மருந்து, மாத்திரைகளை வழங்க முடிந்தது என்ற மன திருப்தி ஒருபுறமும் சொந்தமாக தொழில் தொடங்க வேண்டும் என்ற எனது கனவு நிஜமான திருப்தி மறுபுறமும் எனக்கு கிடைத்துள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

# சேலத்தில் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திட்டப் பணிகள்

**அமைச்சர் ராஜேந்திரன் திறந்து வைத்தார்**



சேலம், மார்ச் 11-

சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி உள்ளிட்ட திட்டங்கள் மூலம் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்வேறு திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதனை நிறைவேற்றி தந்து வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் வளர்ந்துவரும் மக்கட்தொகை பெருக்கத்தேவைகளுக்கு ஏற்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில் இன்றைய தினம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.27 சின்னப்பன் தெருவில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாய கூட கட்டடமும், கோட்டம் எண்.28 சந்தைப்பேட்டை காந்தி நகரில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடமும், கோட்டம் எண்.34 கார்பெட் தெருவில் ரூ.46 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாய கூட கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை பிரதான சாலையில் ஏற்கனவே உடைந்த தரைபாளத்திற்கு பதிலாக ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய தரைபாளம் என மொத்தம் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அபிநயா உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் உள்ளனர்.

# மண்டபம் இளநிலை உதவி அலுவலருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கல்

இராமநாதபுரம், மார்ச் 11-

இராமநாதபுரம் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் தமிழில் சிறந்த குறிப்புகள் வரைவுகள் எழுதும் பரிசு திட்டம் அரசு பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் உள்ளாட்சித் துறை அலுவலக பணியாளர்களுக்குள் , மண்டபம் பேரூராட்சி அலுவலகத்தில் பணியாற்றி வரும் இளநிலை உதவியாளர் முனியசாமி பரிசுக்கு உரியவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார் . இவருக்கு பரிசு தொகையாக ரூபாய் 3000 ம் மற்றும் பாராட்டு சான்றிதழை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் சித் சிங் காலான் வழங்கினார்.



# 18 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு விருது வழங்கல்



நெல்லை, மார்ச் 11-

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் மகளிர் தின விழாவினை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் 771 பயனாளிகளுக்கு ரூ.52.57 கோடி மதிப்பில் வங்கி கடன் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருது 18 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அப்பாவு, மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜூ ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

மகளிரை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடையச் செய்திடும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் மகளிர் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்ட அமைப்பே தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஆகும். ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக்குழுக்கள் மூலம் ஒருங்கிணைத்து சமூக பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையச் செய்திடும் நோக்கத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறவனமானது மகளிர் திட்டம் என்ற சீரிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

மிகவும் ஏழை, ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் முதியோர்கள் ஆகியவர்களை கொண்டு சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை ஊரகப் பகுதிகளில் 5779 குழுக்களும், நகர்ப்புற பகுதிகளில் 4598 குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்ட சுய உதவிக்குழுக்களுக்கு நிதி மேலாண்மை, பொருளாதாரம் முன்னேற்றம் குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி வழங்கப்பட்ட பின் ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.15000 சுழல் நிதியும், நகர்ப்புற பகுதிகளில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.10000/ சுழல் நிதியும் வழங்கப்படுகிறது.

பயிற்சி முடித்து சுழல் நிதி பெறப்பட்ட குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு ரூ.50000 முதல் ரூ.2000000 லட்சம் வரை அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக்குழுக்களை ஊராட்சி அளவில் ஒன்றிணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைக்கப்படுகிறது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கி பெருங்கடனாக 30 லட்சம் முதல் 2.00 கோடி வரை வழங்கப்படுகிறது.

நடப்பு ஆண்டிற்கு (2024–25) திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ.727.00 கோடி வங்கி கடன் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டு நாளது தேதி வரை 8523 குழுக்களுக்கு ரூ.590.50 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 492 ஊரக மற்றும் நகர்ப்புற மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.50.07 கோடி வங்கி கடனுதவியும் வழங்கப்பட்டது. சுழல் நிதியாக 37 குழுக்களுக்கு ரூ.5.55 லட்சமும், வட்டார வணிக வள மையக்கடனாக 10 குழுக்களிலுள்ள 10 உறுப்பினர்களுக்கு ரூ.5.00 லட்சமும், ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்பின் கீழ் 4 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.2.00 லட்சமும், பெண் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 9 பெண் தொழில் முனைவோர்களுக்கு ரூ.8.00 லட்சமும், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளி நிதியின் கீழ் 139 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.139.00 லட்சமும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக 14 சுய உதவிக்குழுக்களுக்கு இணை மானியமாக ரூ.46.00 லட்சமும், நுண்தொழில் நிறுவன நிதி கடனாக 66 உறுப்பினர்களுக்கு ரூ.45.00 லட்சம் என மொத்தம் 771 பயனாளிகளுக்கு ரூ.2.57 கோடி மதிப்பில் கடன் உதவிகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும், 18 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு மணிமேகலை விருதுகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மகளிர் திட்ட திட்ட இயக்குநர் இலக்குவன், துணை ஆட்சியர் பயிற்சி செபி, முன்னோடி வங்கி மேலாளர் கணேஷ் மணிகண்டன், களக்காடு நகர்மன்ற துணை தலைவர் ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் மன்சூர், மாரியப்பன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், கனகராஜ், முக்கிய பிரமுகர்கள் ஜோசப் பெல்சி, பரமசிவன் ஐயப்பன், சித்திக், மற்றும் அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மகளிர் தின விழா



**சிதம்பரம், மார்ச் 11-**

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழியல்துறையின் சார்பில் முத்தையவேள் ஆய்வரங்கம் நிறைவு விழா மற்றும் மகளிர் தின விழா தமிழியல்துறையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் முனைவர் தி.அருட்செல்வி தலைமையுரையாற்றினார். இந்தியமொழிப்புல முதன்மையார் முதுமுனைவர் அரங்க. பாரி முன்னிலை யுரையாற்றினார். தமிழியல்துறைத் தலைவர் முனைவர் ந.வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் முனைவர் தி.அருட்செல்வி இவ்விழாவில் பேசியது: மகளிர் தினத்தைக் கொண்டாடுவதன் நோக்கங்கள் என்னவென்றால், பெண்களுக்கு வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் தலைமைப் பொறுப்புகளில் சமவாய்ப்புகளின் முக்கியத்துவத்தை ஊக்குவித்தல், பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் பாகுபாடு ஆகியவற்றுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பெண்கள் தங்களுக்காக எழுந்து நிற்கவும், தங்கள் தொழில் மற்றும் லட்சியங்களைத் தேர்ந்தெடுக்கவும், ஊக்குவிக்கவும், அரசியல், அறிவியல் மற்றும் சமூகப் பணி, வணிகம் மற்றும் கலைத் துறைகளில் பெண்களின் பங்களிப்புகளை கௌரவித்தல் போன்றவற்றை உள்ளடக்கியது. பெண்களை மையமாகக் கொண்ட மகளிர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. அரசியல், கலாச்சார, சமூக மற்றும் பொருளாதாரத் துறைகள் உட்பட உலகின் அனைத்துத் துறைகளிலும் பெண்களின் சாதனைகளை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது. பாலின சமத்துவத்தின் அவசியம் மற்றும் பெண்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை இந்த நாள் பரப்புகிறது.

தடைகளைத் தகர்த்து எறிந்து பெண்கள் தங்களுடைய கனவுகளை அடைய, கல்வி மிக முக்கிய ஆயுதமாகும். தரமானக் கல்வியை அளிப்பது பெண்களின் முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல சமூகத்தின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். ஒவ்வொரு பெண்ணும் கல்விப் பெற்றிடத் தேவையான அனைத்தையும் செய்து கொடுப்போம். இவ்விழாவில் கலைப்புல முதன்மையர் முனைவர் க.விஜயராணி கல்வியியல் புலமுதன்மையர் முனைவர் குலசேகரபெருமாள், பொறியியல் புலமுதன்மையர் கார்த்திகேயன், வேளாண்புல முதன்மையர் அங்கயற்கண்ணி மற்றும் பல்வேறு துறைத்தலைவாகள் கலந்துக்கொண்டனர். மேலும் சௌந்தாராஜன், தேவி, தமிழியல்துறை பேராசிரியாகள் செந்தில்குமார், சதாசிவம், பாலு, கணபதிராமன், ரவி, நூலகர்கள் பிரபு,ஜோசப் அன்பழகன், தனிஅலுவலர் கார்த்திகேயன், ராஜகுமாரி மற்றும் ஆய்வு மாணவர்கள் முதுகலை மாணவர்கள் பிறதுறை மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் அமைப்பாளர் சே.கல்பனா நன்றி கூறினார்.

# டாடா எலக்ட்ரானிக்ஸ் கிருஷ்ணகிரியில் குழந்தைகளுக்கான கல்விக்கற்றல் முயற்சிகளை மேலும் விரிவுப்படுத்துகிறது




**கிருஷ்ணகிரி, மார்ச் 11-**

கிருஷ்ணகிரி டாடா எலக்ட்ரானிக்ஸ் தனது சமூக நல்லுறவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கிருஷ்ணகிரியைச் சேர்ந்த உள்ளூர் மாணவர்களிடையே நேர்மறையான தாக்கத்தை உருவாக்கும் வகையில் தேர்வுகளுக்கு தயாராக செய்யும் வகையிலான மாதிரி தேர்வு மற்றும் கலை மேம்பாட்டுப் பயிற்சி என இரு முக்கிய நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

'விங்ஸ் ப்ராஃபிஷியன்சி டெஸ்ட் 2025' ['Wings Proficiency Test 2025'] என்பது 10ம் வகுப்பு மாணவர்கள், வரவிருக்கும் தங்களது பொதுத் தேர்வுகளுக்குத் தயாராக உதவும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு மாதிரித் தேர்வாகும். இம்மாணவர்கள் முறையாக கட்டமைக்கப்பட்ட தேர்வு அனுபவத்தைப் பெறுவதை உறுதி செய்வதற்காக, டாடா எலக்ட்ரானிக்ஸ் மாவட்ட கல்வி அலுவலகத்துடன் இணைந்து இந்தத் தேர்வை நான்காவது ஆண்டாக நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.. இது மாதிரித் தேர்வு தொடர்பாக மாணவர்களிடையே இருக்கும் மன அழுத்தத்தைக் குறைத்து, அவர்களின் நம்பிக்கையை மேம்படுத்த உதவும். டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் தேர்வை நடத்துவதிலும், தேர்வுக் கருவிகள் மற்றும் சான்றிதழ்களை விநியோகிப்பதிலும், மாணவர்களுக்கு வழிகாட்டுவதிலும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இந்த முன்முயற்சியின் மூலம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள டாடா எலக்ட்ரானிக்ஸ் ஆலையிலிருந்து 15 கி.மீ சுற்றளவில் உள்ள 20 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 2,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்தனர்.

டாடா எலக்ட்ரானிக்ஸ், 'ஆர்ட் வண்டி' [Art Wandi]-யையும் அறிமுகப்படுத்தியது. இது உள்ளமைக்கப்பட்ட ஆடியோ சிஸ்டம், சவுண்ட் மிக்சர்கள், டிவி, கணினிகள் மற்றும் பிற மல்டிமீடியா கருவிகள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு முழுமையாக அதிநவீன நடமாடும் படைப்பாற்றல் மையம் [mobile creative hub] ஆகும். இது ஒரு நடமாடும் நூலகமாகவும், நிகழ்ச்சிகளை நடத்துபவர்களுக்கான ஒரு மேடையாகவும், திரைப்படங்களைத் திரையிடுவதற்கான தளமாகவும், கலைப் பொருட்கள், இசைக்கருவிகள், தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் காட்சி கலைப் பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனமாகவும் செயல்படுகிறது. இந்தப் பகுதியில் உள்ள பல கிராமங்களில் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்குச் செல்லும் இந்த ஆர்ட் வண்டி, மாணவர்கள் வாய்ப்புகள் இல்லாமல் தவறவிடக்கூடிய பல்வேறு கலை வடிவங்களைப் பற்றிய அறிவைப் பெறுவதை உறுதி செய்கிறது.ஆர்ட் வண்டி முயற்சியில், குழந்தைகள் பொம்மை செய்தல், கதை எழுதுதல், ஸ்டோரிபோர்டிங், ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், புத்தக உருவாக்கம் மற்றும் நாடக நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதற்காக, ஒவ்வொரு பள்ளியும் நடத்தும் ஐந்து நாள் கருத்து பரிமாற்ற கலை முகாமும் அடங்கும். ஒரு கலைத் திருவிழாவாக, இந்த கலை முகாமில் மாணவர்கள் உள்ளூரைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுடன் இணைந்து தங்களது கலைப் படைப்புகளைக் காட்சிப்படுத்துவார்கள். மேலும் பள்ளிகளுக்கு இடையேயான கலை விழாவில், மாணவர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தும் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கவும், சாதிக்க வேண்டுமென்ற உணர்வை உத்வேகத்துடன் முன்னெடுக்கவும் உதவும். 70க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற தன்னார்வலர்கள், மாணவர்கள் தங்களுக்கு தேவையான ஆலோசனைப் பெறுதல், வழிகாட்டுதல், மற்றும் நேரடி ஈடுபாட்டைப் பெறுவதை உறுதிசெய்யும் முயற்சிக்கு தங்களது ஆதரவை அளிப்பார்கள். இம்முயற்சியானது கல்விக் கற்றலை ஒரு மகிழ்ச்சியான மற்றும் முன்னேற்றத்தை நோக்கிய அனுபவமாகவும் மாற்றும்.

இந்த இரு முயற்சிகளும், ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் சமூகப் பின்னணியைப் பொருட்படுத்தாமல், கல்வி அல்லது கலை சார்ந்த கல்விக்கான வாய்ப்புகளைப் பெறுவது உறுதி செய்யப்பட வேண்டுமென்ற டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் உறுதிப்பாட்டுடன் ஒருங்கிணைந்து போகின்றன.

# நடமாடும் கால்நடை மருத்துவ சிகிச்சை வாகனம் அமைச்சர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்

**தென்காசி, மார்ச் 11-**

தென்காசி மாவட்டத்தில் இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நடமாடும் கால்நடை மருத்துவ சிகிச்சை வாகனத்தை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.




பின்னர் அவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் கால்நடைகளை பராமரித்திடவும், பாதுகாத்திடவும் பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் தேசிய விலங்குகள் நோய்த்தடுப்பு திட்டத்தின்கீழ் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. இரண்டாம் கட்டமாக, மேலும் ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி தென்காசி மற்றும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று முதல் வாகனசேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராம மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கியப்பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்திடவும், மேம்பட்ட தரமான மருத்துவ சிகிச்சை கால்நடைகளுக்கு அளிக்கவும் இரண்டாம் வெண்மைப்புரட்சியை ஏற்படுத்திடவும், முக்கிய காரணியாக இருக்கும். கால்நடை மருத்துவ சிகிச்சை கிடைப்பதில் சிரமம் உள்ள தொலைதூர கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு 245 நடமாடும் கால்நடை மருத்துவ சேவை வாகனங்கள் தமிழ்நாடு முதல்வரால் தொடங்கிவைக்கப்பட்டது. வாகனங்களில் ஒரு கால்நடை மருத்துவர். ஒரு கால்நடை உதவியாளர், ஒரு ஓட்டுநர் பணியமர்த்தப் பட்டுள்ளனர். இந்த மருத்துவ வாகனங்கள் காலை 8 மணி முதல் பிற்பகல் மணி வரை தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராமங்களில் கால்நடை மருத்துவ சிகிச்சைப் பணிகள் மற்றும் கருவூட்டல் பணிகளை மேற்கொள்ளவும், பிற்பகலில் கால் சென்டர் மூலம் பெறப்படும் அவசர சிகிச்சைப் பணிகளை மேற்கொள்ளவும் உள்ளது. நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியில் சிறு அறுவை சிகிச்சை செய்யும் வகையில் அறுவை சிகிச்சை உபகரணங்கள், இரத்த மாதிரிகளை ஆய்வு செய்ய நுண்ணோக்கி, தடுப்பூசிகளை முறையாக பராமரிக்க குளிர்சாதனப் பெட்டி, சினை ஊசிகளை பராமரிக்க திரவ நைட்ரஜன் குடுவை, மலடுநீக்க சிகிச்சை மருந்துகள், ஆண்மை நீக்க உபகரணங்கள், கால்நடை மருந்துகள், குடற்புழுநீக்க மருந்துகள் போன்ற கால்நடை மருந்தகத்தில் இருக்கும் அத்தனை வசதிகளுடனும் கால்நடை நடமாடும் மருத்துவ ஊர்தி செயல்பட உள்ளது. அவசர சிகிச்சை தேவைப்படுவோர் 1962 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு தகவல் தர வேண்டும். தகவல் பெறும் பட்சத்தில் வீடு தேடி வந்து கால்நடைகளுக்கு சிகிச்சை வழங்கப்படும். எனவே கால்நடைகளுக்கு அரசின் சேவைகளை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் கனகராஜ் முத்துப்பாண்டியன், திருநெல்வேலி கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணைஇயக்குநர் ரிச்சர்டு ராஜ், உதவி இயக்குநர் மகேஸ்வரி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 50 மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கல்



**தென்காசி, மார்ச் 11-**

தென்காசி மாவட்டத்தில் இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.55 லட்சம் மதிப்பிலான இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் வழங்கினார்கள்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளுக்காக பல்வேறு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் முன்னேறும் வகையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் ஒரு மாற்றுத் திறனாளிக்கு தலா ரூ.1,10,000 வீதம் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.55 லட்சம் மதிப்பிலான இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாற்றுத்திறனாளிகள் அரசின் அனைத்து திட்டங்களின் மூலம் நலத்திட்ட உதவிகள் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயப்பிரகாஷ், தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் கனகராஜ் முத்துப்பாண்டியன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# புதுச்சேரி மீனாட்சிப் பேட்டை மலர் ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் 25 வது ஆண்டு விழா




புதுச்சேரி, மார்ச் 11-

புதுச்சேரி மீனாட்சிப் பேட்டை மலர் ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் மேலாண்மை, மலர் பள்ளியின் பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் 25 வது ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

பள்ளி முதல்வர் குமரேசன் விழாவிற்கு தலைமை தாங்கினார். பாண்டிச்சேரி சுயநிதி தனியார் பள்ளிகள் சங்கத்தின் கூட்டமைப்பு தலைவர் டாக்டர் ரங்கநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். புதுச்சேரி காவல்துறை ஆய்வாளர் ஆடலரசன் மற்றும் வேலூர் வருவாய் துறை JRI கவிஞர் ராஜன் பாபு ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவ மாணவிகளிடையே சிறப்புரை ஆற்றினர். விழாவில் மாணவ, மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

விழாவில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# காரைக்கால் மாவட்ட அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வித்துறை சார்பில் கையடக்க லேப்டாப் வழங்கள்



காரைக்கால், மார்ச் 11-

காரைக்கால் மாவட்ட அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வித்துறை சார்பில் கையடக்க லேப்டாப் வழங்கும் நிகழ்ச்சி நேற்று சிறப்பாக நடைபெற்றது.

காரைக்கால் நேரு நகரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் தலைமை தாங்கி, 117 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கையடக்க கணினிகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காரைக்கால் முதன்மை கல்வி அதிகாரி விஜய மோகனா, பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரி முதல்வர் கந்தவேலு, சமக்ரா சிக்ஷா உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் வனிதா, வட்ட ஆய்வாளர் முனைவர் பொன் சௌந்தரராசு மற்றும் அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலெக்டர் சோம சேகர் அப்பாரவ் பேசியதாவது: வீட்டில் பெற்றோர்களுக்கு அடுத்து அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தான் மிக முக்கியம் பங்கு வகின்றனர். மாணவர்கள் பெற்றோர் வசம் அதிகமாக இருப்பதை விட ஆசிரியர்கள் கூட தான் அதிக நேரம் செலவழிக்கின்றனர். மாணவர்களின் ஆரம்ப கால கல்வியான 1 முதல் 5 ஆம் வகுப்பு கல்வி காலம் தான் மாணவர்களின் எதிர்கால கல்விக்கு அடித்தளமாக விளங்குகிறது. எனவே தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தான் மாணவர்கள் ஆரம்ப கால கல்வியில் முக்கிய பங்கு பெறுகின்றனர்.

எனவே மாணவர்களுக்கு எளிதாக கல்வி பாடத் திட்டத்தை கொண்டு சேர்க்க கையடக்க கணினி கல்வித்துறை மூலம் தரப்படுகின்றது. தற்போதைய காலகட்டத்தில் ஆங்கிலம் மொழி முக்கிய பங்கு வகிப்பதால் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அதனை அவசியம் எளிமையாக கற்று தர வேண்டும். மாணவர்களுக்கு கல்வியுடன் சிறந்த நற்பலங்களையும் கற்றுத்தர வேண்டும் என்றார்.

விழாவில் காரைக்கால் முதன்மை கல்வி அதிகாரி விஜய மோகனா பேசியதாவது:அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் பேசி ஆங்கில புலமையை வலுப்படுத்த வேண்டும். ஆங்கிலத்தில் மாணவர்களுக்கு கேள்வி எழுப்பி புரிதலான ஆங்கில கல்வியை கொடுத்து கல்வியில் சிறந்தவர்களாக மாற்ற முயற்சி எடுக்க வேண்டும்.

புதுவை முழுவதும் அனைத்து அரசு பள்ளிகளில் தற்போது சி.பி.எஸ்.இ. பாட திட்டம் அமல்படுத்தப் பட்டுள்ளதால் ஆங்கிலம் முக்கியமாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு மாணவர்களை சிறந்த மாணவர்களாக மாற்றுவதற்கு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் முன்வர வேண்டும் என்றார், நிகழ்ச்சி ஏற்பாடுகளை சமக்ரா சிக்ஷா உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் வனிதா மற்றும் ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம்



சிதம்பரம், மார்ச் 11-

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பயிற்சி, வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் இயக்குனரகத்தின் கலை மற்றும் அறிவியல் புலம் ஏற்பாடு செய்திருந்த வேலைவாய்ப்பு முகாமில் சுமார் 375 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த முகாமில் Magic Bus India Foundation- Bangalore, Omega, Innovative hiring, Adecco, SVK Prime, Muthoot finance ñŸÁ‹ First source ஆகிய 7 நிறுவனங்கள் கலந்து கொண்டார்கள். இந்த முகாமில் தேர்வு செய்யபட்ட 140 மாணவ, மாணவியர்களுக்கான வேலை வாய்ப்பு ஆணைகளை துணைவேந்தர் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர், நுண் கலை புலமுதல்வர் பேராசிரியர் அருட்செல்வி மற்றும் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் பிரகாஷ் பல்கலைக்கழக மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்கள். இதில் கலை புலமுதல்வர் பேராசிரியர் விஜயராணி மற்றும் அறிவியல் புல முதல்வர் பேராசிரியர் ஸ்ரீராம் ஆகியோர் கலந்துக்கொண்டார்கள். இந்த வேலைவாய்ப்பு முகாமை, பயிற்சி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் இயக்குனரகத்தின் இயக்குனர் மற்றும் வேலைவாய்ப்பு அதிகாரிகள், துறை ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாடு செய்தனர்.

# கடலூரில் நூலக வாசகர் வட்டம் சார்பாக உலக மகளிர் தின விழா



கடலூர், மார்ச் 11-

கடலூர் அரசு தலைமை மருத்துவமனை கிளை நூலக வாசகர் வட்டத்தின் சார்பாக உலக மகளிர் தின விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு வாசகர் வட்ட தலைவர் ம.ரா சிங்காரம் தலைமை தாங்கினார். கண் மருத்துவர் தே. கேசவன் முன்னிலை வகித்தார். செயலாளர் பார்த்திபன் வரவேற்புரையாற்றினார். விழாவில் நல பணிகள் இணை இயக்குனர் (பொறுப்பு) மருத்துவர் குமார் மகளிர் தின விருதுகளை வழங்கி சிறப்புரையாற்றினர். ஓய்வு பெற்ற இணைஇயக்குனர் மருத்துவர் சாரா செலின் பால், மும்மொழி ஆசிரியை கவிஞர் கலைச்செல்வி, கண்காணிப்பாளர் வத்சலா ஆகியோர் விருது பெற்றனர். ஓய்வு பெற்ற கலால் துறை இணை ஆணையர்(ப.நி) பாவலர் சண்முகசுந்தரம், ஓய்வு பெற்ற உணவு பாதுகாப்பு அலுவலர் நல்லதம்பி ,ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கவியரங்கத்திற்கு தமிழ்நாடு நல்லாசிரியர் விருது பெற்ற கவிஞர் கவிமனோ தலைமை தாங்க கவிஞர் அன்பன் சிவா, கவிஞர் காரை. பழ. ஆறுமுகம், கவிஞர் பிரபாகரன், கவிஞர் உதயகுமார் ஆகியோர் கவியரங்கத்தில் கலந்து கொண்டனர். இறுதியில் துணைத்தலைவர் குமார் நன்றி கூறினார்.

# முதலமைச்சர் தலைமையில் அமைச்சரவை கூட்டம்



புதுச்சேரி, மார்ச் 11-

புதுச்சேரி சட்டசபையில் அமைச்சரவை கூட்டம் நேற்று நடந்தது. புதுச்சேரியில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெறுவதை முன்னிட்டு முதலமைச்சர் ரங்கசாமி தலைமையில் அமைச்சரவை கூட்டம் சட்டசபை வளாகத்தில் நேற்று மாலை நடந்தது. கூட்டத்தில், உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், வேளாண்துறை அமைச்சர் தேனீ.ஜெயக்குமார், குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமுருகன், ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சாய் ஜெ. சரவணன் குமார், தலைமைச் செயலர் சரத் சவுகான் மற்றும் அரசு செயலர்கள் கலந்து கொண்டனர். பட்ஜெட்டில் இடம் பெற உள்ள புதிய திட்டங்கள் இறுதி செய்யும் வகையில் ஆலோசனை நடந்தது.

# பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்ட விழிப்புணர்வு முகாம்




புதுச்சேரி, மார்ச் 11-

மத்திய அரசின் மானியத்துடன் கூடிய கடன் திட்டமான "பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் (PMEGP)" பற்றிய ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் தட்டாஞ்சாவடி, தொழிற்பேட்டையிலுள்ள மாவட்டத் தொழில் மைய அலுவலகத்தில் நேற்று காலை 10 மணிமுதல் மாலை 3 மணி வரை நடைபெற்றது.

முகாமில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் பலர் பங்கேற்று இத்திட்டத்தைப் பற்றிய தகவல்களை அறிந்து பயனடைந்தனர்.

தொழில் வணிகத்துறை இயக்குநர் ருத்ர கவுட், மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரும், புதுச்சேரி கதர் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியுமான கோவிந்தராஜன் தலைமையில் மாவட்டத் தொழில் மைய இயக்க மேலாளர் ஜெயராமன், சென்னையிலுள்ள கதர் மற்றும் கிராம தொழில்கள் ஆணையத்தின் உதவி இயக்குநர் செல்வி கருணாநிதி மேலாளருமான இந்தியன் வங்கியின் தலைமை மாவட்ட மற்றும் புதுச்சேரி சதீஷ்குமார், பல்கலைக்கழகத்திலுள்ள அடல் இன்குபேஷன் தொழில்நுட்ப சென்டரின், இன்குபேஷன் மேலாளர் காமேஷ்வரன் சிறப்புரை ஆற்றினார்கள். விழிப்புணர்வு முகாமிற்கான ஏற்பாடுகளை மாவட்டத் தொழில் மையத்தின் தொழில்நுட்ப அதிகாரி செந்தில்குமார், கதர் வாரியத்தின் அதிகாரி ஜெயராஜ் மற்றும் மாவட்டத் தொழில் மைய அதிகாரிகள் மேற்கொண்டனர்.

# ஆர்ட்லேண்ட் கலை மையம் சார்பில் 12 பெண் ஓவியர்களின் 'கிரியேட்ரிக்ஸ்' ஓவியக் கண்காட்சி



**புதுச்சேரி, மார்ச் 11-**

தேசிய மகளிர் தினத்தை முன்னிட்டு ஆர்ட்லேண்ட் கலை மையம் சார்பில் 'கிரியேட்ரிக்ஸ்' என்ற தலைப்பில் ஓவியக் கண்காட்சியை வண்ண அருவி கேலரியில் நடத்தியது. இக்கண்காட்சியில் பணிபுரியும் மகளிர், இல்லத்தரசி, கல்லூரி மாணவிகள் என 12 பெண் ஓவியர்களின் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

கண்காட்சியில் ஆதிரை சரவணக்குமார், இந்துமோகன், டாக்டர் அர்பிதா, டாக்டர் இரம்யா, பொறியாளர் தேவிபாரதி, இலட்சியா மதியழகி, இரஹானா, அபர்னா, ராஜ் பிரியா, சினேகா, ஹேமரோஷினி, லலிதா உள்ளிட்ட பெண் ஓவியர்கள் கலந்து கொண்டு, பெண்களின் வலிமை, ஆற்றல், அதிகாரங்களை மீட்டெடுத்தல், படைப்பாற்றல், கலையாற்றல் இவைகளை வெளிப்படுத்தும் வகையில் நீர்வண்ணம், நெய்வண்ணம், அக்ரிலிக், ஆயில் பேஸ்டல் கொண்டு உருவாக்கப்பட்ட ஓவியங்கள் காண்பவரை கவரும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இக்கண்காட்சியின் துவக்க விழா மகளிர் தினத்தன்று நடைபெற்றது. இவ்விழாவில் முன்னாள் கலைப்பண்பாட்டுத்துறை இயக்குநர் கலியபெருமாள், புதுவை அரசின் வரதட்சனை தடுப்பு ஆலோசனைக் குழு தலைவர் முனைவர். வித்யா ராம்குமார், மருத்துவர் ரேஷ்மா தேவிகா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பெண் ஓவியர்களை வாழ்த்தி நினைவுப் பரிசுகளை வழங்கினர். ஓவியர் சரவணக்குமார் வரவேற்புரையாற்றினார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கலைமையத்தின் செயலர் ஆதிரை சரவணக்குமார் செய்திருந்தார்.

# புதுச்சேரி இதயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மகளிர் தின விழா



**புதுச்சேரி, மார்ச் 11-**

இதயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மகளிர் தின விழா சூரியன் FM உடன் இணைந்து மதியம் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர். அ. பாத்திமா தலைமையேற்றார். பல்வேறு கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளின் வெற்றி பெற்ற இதயா கல்லூரி மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். சூரியன் FM தயாரிப்பாளர் டேவிட் வரவேற்புரை வழங்கினார். தமிழகத்திலும் தமிழ் இலக்கியத்திலும் சிறந்த பெண்மணிகளை வரிசைக்கடுத்தினார். பெண்களை அழகானவர் என்று சொல்வது அடிமைப்படுத்துதற்கு என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைத்தார். இதயா கல்லூரி மாணவி ஜோதிகா (II B.Com CS) தமது உரையில் பெண்கள் தனது ஆளுமைத் திறனை வளர்த்து கொள்ள வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தார். கணிதத் துறை மாணவி ஆனி (II முதுகலை கணிதம்) தமது உரையில் பெண்கள் தினம் கொண்டாடப்படுவதற்கான காரணம் என்ன என்பதையும் பெண்களின் சுதுந்திரம் என்பது நாம் உடுத்தும் ஆடை அல்ல நாம் என்னவாக விரும்புகிறோமோ அதுவாக மாறும் வரை முயற்சி செய்தல் வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தார்.ஆங்கிலத் துறை சார்ந்த பிரியதர்ஷினி (M.A. Eng II) பெண்களுக்குள் ஒற்றுமை இல்லாத சூழலில் பெண்கள் தின விழா கொண்டாடப்படுவதற்கான காரணம் என்ன என்பதை முன் வைத்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர் காயத்ரி பீரசாந்த் தமது உரையில் பெண்கள் கல்வி கற்றல் ஓர் ஆயுதம் பெண்கள் அரசியலில் பங்கெடுத்தல் வேண்டும் என்ற கருத்தினை ஆணித்தரமாக வலியுறுத்தினார்கள்.

சூரியன் FM, RJ பத்மபிரியா தமது உறையில் பெண்கள் கல்லூரியில் சிறந்தவர்களாக இருந்தால் வாழ்க்கையில் எதனையும் வெல்ல முடியும் என்பதைக் கூறினார். RJ வர்ஷா தமது உரையில் பெண்கள் ஆளுமைத் திறனுடன் வரை வேண்டும் என்பதை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் உறையாற்றிய இதயா மகளிர் கல்லூரி மாணவிகளுக்குக் கல்லூரி முதல்வர் முனைவர். அ. பாத்திமா பரிசு வழங்கி சிறப்பித்தார்கள். இறுதியில் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

# கனமழை எச்சரிக்கை குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்



**தென்காசி, மார்ச் 11-**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கனமழை எச்சரிக்கை (Orange Alert) குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், தெரிவித்ததாவது, இந்திய வானிலை ஆய்வு மையத்தின் மூலமாக தென்காசி மாவட்டத்திற்கு கனமழைக்கான (ளிகூஷீணீஸீரீமீ கிறீமீக்ஷீமீ) அறிவிப்பு வரப்பெற்றுள்ளது. எனவே, சார்நிலை அலுவலர்கள் அனைவரும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, இடர்கள் ஏற்படுவதைத் தவிர்க்கவும் மற்றும் இடர் ஏதாவது ஏற்படின் உடனடியாக மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும். மேலும், கடந்த 12.12.2024 முதல் 14.12.2024 வரையில் பெய்த கனமழையினால் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் உள்ள மக்களுக்கு உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

நீர்வள ஆதாரத்துறை, வேளாண்மைத்துறை, நுகர்பொருள் வாணிபக்கழகத்துறை, பொதுவினியோகத்திட்டம், சுகாதாரத்துறை, வனத்துறை மற்றும் தீயணைப்புத்துறை, வருவாய்த்துறை, நெடுஞ் சாலைத்துறை, குடிநீர் வடிகால் வாரியம், மின்சரா வாரியம், காவல் துறை, போக்குவரத்துத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்களுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் துறை வாரியாக நடவடிக்கை மேற்கொள்ளவும். கனமழையின் காரணமாக மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்கு ஏதுவாக பேரிடர் கால மாவட்ட கட்டுப்பாடு அறை 24 மணிநேரமும் சார்துறை சார்ந்த அலுவலர்களுடன் செயலில் இருத்தல் வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுப்புலெட்சுமி, வருவாய் கோட்டாட்சியர்கள் லாவண்யா(தென்காசி), கவிதா (சங்கரன்கோவில்), வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மைத்துறை) அரவிந்த், மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புனித பேட்ரிக் மேனிலைப்பள்ளியின் நிறுவனர் ரெஜிஸ் நினைவு நாளில் ரத்ததான முகாம்




**புதுச்சேரி, மார்ச் 11-**

புதுச்சேரி புனித பேட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் நிறுவனர் ரெஜிஸ் நினைவு நாளை முன்னிட்டு, துவக்கப்பள்ளி வளாகத்தில் ரத்ததான முகாம் கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இவ்வாண்டும் அதே உற்சாகத்துடன் 6ம் ஆண்டு நினைவஞ்சலி நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை ரத்ததான முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் புதுவை ஜிப்மர் மருத்துவமனை ரத்த வங்கியின் தலைமை மருத்துவ அதிகாரி மருத்துவர் சுனில் ஜாதேவ் மற்றும் துறைத்தலைவரும் மருத்துவருமான அபிஷேக் ஆகியோரின் தலைமையில் மருத்த துவக் கொடையாளர்களைப் ரத்த வங்கி குழுவினர் பரிசோதனை செய்தபின் சுமார் 100க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ரத்ததானம் செய்தனர்.

பள்ளியின் தாளாளர் பிரடெரிக் முதல் நபராக ரத்ததானம் செய்து முகாமினைத் துவக்கி வைத்தார். இம்முகாமில் பள்ளியின் மருத்துவ இயக்குநர் ஜீட்டா பிரடெரிக், பள்ளியின் முதல்வர் ஸ்டெல்லா மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் முனைவர் சீத்தாராமன், அல்போன்ஸ் ஹில்டா மற்றும் சிவக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இம்முகாமிற்கான ஏற்பாடுகளை ரத்ததான முகாம் அமைப்பாளர் ஆசிரியை மீனாட்சி மற்றும் பள்ளியின் இருபால் ஆசிரிய பெருமக்களும், தன்னார்வலர்களும் சிறப்பாகச் செய்திருந்தனர். ரத்ததான முடிவில் மொத்தம் 71 யூனிட் ரத்த வகைகளை புதுச்சேரி புனித பேட்ரிக் மேல்நிலைப் பள்ளி சார்பில் ரத்தக்கொடையாளர்கள் ஜிப்மர் ரத்த வங்கிக்கு அளித்திருந்தனர்.

புனித பேட்ரிக் முதுநிலைப் பள்ளியில் கணக்காளராக பணிபுரியும் ஆந்திரே வேல்முருகன் கடந்த 20 ஆண்டுகளில் இன்றைய ரத்ததான முகாமிலும் பங்கேற்று 85வது முறையாக ரத்ததானம் அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ஸ்ரீ முனீஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம்



**வேலூர், மார்ச் 11-**

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் வட்டம் செஞ்சி ஊராட்சி கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய புனருத்தாரணமகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுந்தருளித்து குலதெய்வமாகவும் அனைத்து பக்தர்களையும் காத்து ரட்சித்து கொண்டிருக்கின்ற ஸ்ரீ முனீஸ்வரர், பச்சை அம்மன், சப்த கன்னிகள் ஆலயத்தின் புனருத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் ஞாயிறன்று சுபயோக சுப தினத்தில் காலை 9 மணி மேல் 10.30 மணிக்குள்ளாக மேஷ லக்னத்தில் கணபதி, லக்ஷ்மி, நவகிரக ஹோமம் தனபூஜை மற்றும் இரண்டாவது கால பூஜை வாஸ்து சாந்தி பிரவேச பலி பூர்ணஹூதி ஆகியவை நடத்தப்பட்டது. பிறகு புனிதநீர் கலசத்தில் கொண்டு வந்து பூஜை செய்து முனீஸ்வரன் உச்சியில் ஊற்றி மந்திரங்கள் முழங்க தீபாராதனை செய்யப்பட்டது. பின் பக்தர்களின் மேல் புனித நீர் தெளித்து பின் அன்னதானமும் வழங்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு முனீஸ்வரர் அருளை பெற்று சென்றனர். இதில் சிறப்பு விருந்தினராக அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினரும் திமுக வேலூர் மாவட்ட செயலாளருமான ஏ. பி. நந்தகுமார், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் டீக்காராமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை திமுக நிர்வாகி சிட்டிபாபு, செஞ்சி, கிருஷ்ணாபுரம், வெங்கடாபுரம், ஆயர்குளம், தேவிகாபுரம், கோட்டைமேட்டூர் ஆகிய ஏழு ஊர் பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# புதுவையில் 13 நாள் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெறும்

## சபாநாயகர் செல்வம் தகவல்

**புதுச்சேரி, மார்ச் 11-**

புதுவை சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் கவர்னர் உரையுடன் நேற்று தொடங்கியது. கவர்னர் உரையை தொடர்ந்து சட்டசபையின் அலுவல் ஆய்வுக்கூட்டம் சபாநாயகர் செல்வம் தலைமையில் நடந்தது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து சபாநாயகர் செல்வம் நிருபர்களிடம் கூறியதாவது: புதுவை சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்தொடர் 27ந் தேதி வரை நடக்கிறது. செவ்வாய்க்கிழமை (இன்று) கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடக்கிறது. 12ந் தேதி நிதி பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் ரங்கசாமி பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார். 13ந் தேதி பட்ஜெட் மீதான விவாதம் நடக்கிறது. அதன்பின் 3நாட்கள் விடுமுறைக்கு பின் மீண்டும் 17ந் தேதி சட்டசபை கூடி 21ந் தேதி வரை நடக்கிறது. சனி, ஞாயிறு விடுமுறைக்கு பின் 24ந் தேதி முதல் 27ந் தேதி வரை சட்டசபை நடக்கிறது. ஒட்டுமொத்தமாக 13 நாட்கள் சபை நடக்கிறது. பட்ஜெட்டுக்கு கடந்த சனிக்கிழமை அனுமதி கிடைத்துவிட்டது.



ரூ.13 ஆயிரத்து 600 கோடிக்கான பட்ஜெட்டை முதலமைச்சர் ரங்கசாமி தாக்கல் செய்கிறார். காகிதமில்லா சட்டசபை நிகழ்ச்சிகளை இம்முறை தொடங்கியுள்ளோம். பட்ஜெட் தாக்கல் செய்யும் நாளில் எம்.எல்.ஏ.,க்களுக்கு பட்ஜெட் புத்தகம் வழங்கப்படும். தொடர்ந்து எம்.எல்.ஏ.,க்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். புதிய சட்ட மன்ற வளாகம் தட்டாஞ்சாவடியில் உள்ள 13.50 ஏக்கரில் 3.45 ஏக்கரில் கட்டப்பட உள்ளது. இதற்காக திருத்தி அமைக்கப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.657 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சகம் ஒப்புதல் பெற கோப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் மானியத்துடன் பல்வேறு திட்டங்களை புதுவை அரசு செயல்படுத்தி வருகிறது. பிரதமரின் கிராம சாலை மேம்பாடு திட்டத்தில் 110 கி.மீ., சாலை மேம்படுத்த ரூ.71 கோடி நிதி கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு மட்டும் மத்திய அரசு திட்டங்கள் ரூ.ஆயிரம் கோடியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசு திட்டங்கள் மூலம் புதுவை பெஸ்ட் புதுவையாக மாறும்.

பொதுப்பணித்துறை வவுச்சர் ஊழியர்கள் சம்பளம் ரூ.18 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. சில ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் கோர்ட்டுக்கு சென்று தீர்ப்பு பெற்றுள்ளனர். இதனால் சில அறிவிப்புகளை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவர முடியவில்லை. பணி நியமனம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனால் தான் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு வேலை வழங்க முடியவில்லை. ஆனாலும், இதற்கும் தீர்வு காணப்பட்டு, நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு பணி வழங்கப்படும்.

புதுவை சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மாநில அந்தஸ்து தொடர்பான 13 தீர்மானங்கள் மத்திய அரசுக்கே அனுப்பப்படவில்லை. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைந்த பிறகே 2022ல் முதல் முறையாக மாநில அந்தஸ்து தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இதற்கு மத்திய அரசு தற்போதைய நிலையே தொடரும் என தெரிவித்துள்ளது. தீர்மானம் நிறைவேற்றினால் மாநில அந்தஸ்து தர வேண்டும் என்பது இல்லை. இதற்காக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். டெல்லியில் பிரதமரை சந்திக்க அனுமதி கோரியுள்ளோம். அனுமதி கிடைத்தவுடன் அமைச்சர்கள். எம்.எல்.ஏ.,க்கள் டெல்லி சென்று பிரதமரை சந்திப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்



திருநெல்வேலி, மார்ச் 11-

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. இரா.சுகுமார், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பொதுமக்களின் கோரிக்கையின் தன்மைக்கேற்ப மனுக்கள் பதிவு செய்யப்பட்டதோடு, அம்மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அளிக்கும் வகையிலும், முக்கிய கோரிக்கைகள் மற்றும் பொது பிரச்சனைகள் தொடர்பான மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளிப்பதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து மனுக்களை பரிசீலனை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும் முதலமைச்சரின் தனிப்பிரிவுகள் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இணை மானிய நிதிக்கடன் திட்டத்தில் நாங்குநேரி வட்டாரம், சங்கனாங்குளம் ஊராட்சி, சிவந்தியாபுரம், திரு.க.முருகேன். த/பெ.கணபதி. என்பவருக்கு சிறுகடன் மூலம் வங்கிக் கடனாக ரூ.27.50 இலட்சம் மற்றும் அரசு மானியமாக ரூ.8.68 இலட்சம் கதிரடிக்கும் இயந்திரத்தினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.3.28 இலட்சம் மதிப்பில் தலா 2 வீதம் 100 காதொலி கருவியினை 50 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.


இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா, அவர்கள், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சரவணன் அவர்கள், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் ஜெயா அவர்கள், மாவட்ட செயல் அலுவலர் (வாழ்ந்து காட்டுவோம்) கணபதி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சிவசங்கரன் அவர்கள் மற்றும் அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# மாநில விருது பெற்ற மாணவி ஆட்சியரிடம் வாழ்த்து பெற்றார்



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாணவி க.சௌமியா பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருது பெற்றதை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

# திருமணத்திற்கு திருமாங்கல்ய தங்கம் வழங்கும் திட்டத்தில் பயனாளிகளுக்கு தங்க நாணயத்தை அமைச்சர் வழங்கினார்



தூத்துக்குடி மாவட்டம் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு திருமாங்கல்ய தங்கம் வழங்கும் திட்டத்தில் 276 பயனாளிகளுக்கு ரூ.1.70 கோடி மதிப்புள்ள தங்கம் நாணயம் மற்றும் ரூ.2.90 கோடி நிதியுதவிகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன் வழங்கினார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி.பெ.பிரேமலதா, உதவி ஆணையர் (மேற்கு மண்டலம்) வெங்கடாசலம் ஆகியோர் உள்ளனர்.

# குறுங்காடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடவுசெய்யும் பணியினை ஆட்சியர் துவக்கி வைத்தார்



கடலூர், பெரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் குறுங்காடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 500 மரக்கன்றுகள் நடவுசெய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் துவக்கி வைத்தார். உடன் கல்லூரி முதல்வர் இரா.ராஜேந்திரன், பேராசிரியர்கள் கு.நிர்மல்குமார், மா.ஆனந்தராஜ் உட்பட பலர் உள்ளனர்.

# சேலம் அரசு கலைக்கல்லூரியில் புதிய வகுப்பறை கட்டடங்களை அமைச்சர் திறந்து வைத்தார்





சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் அரசு கலைக்கல்லூரியில் கூடுதலாகக் கட்டப்பட்டுள்ள 6 புதிய வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், கல்லூரி முதல்வர் முனைவர் செண்பகவள்ளி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# செங்கல்பட்டில் முதல்வர் ரோடு ஷோ

# புதுச்சேரி அரசை கண்டித்து திமுக, காங்கிரஸ் வெளிநடப்பு





# இயக்குனர் ஷங்கரின் சொத்து முடக்கத்துக்கு இடைக்கால தடை


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 11-3-2025 செவ்வாய்க்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்